# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.74/2020.
Prosecution witness for P.W.14.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. சிவகாமி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2025.

A2 died. A1 absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கொம்மடிக்கோட்டை கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு எழுவரை முக்கி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது 29.01.2019 அன்று மதியம் 2 மணியளவில் நான் என் அலுவலகத்தில் இருந்தபோது போலீசார் என் கைபேசியில் என்னை தொடர்பு கொண்டு தோப்பு விலக்கில் இருப்பதாகவும் நான் வர வேண்டுமென்றும் சொன்னார்கள். நானும், அப்போதே ஓய்வு பெற்ற கிராம உதவியாளர் பூலோக பாண்டி என்பவரும் மேற்படி தோப்பு விலக்கிற்கு சென்றபோது 1ம் எதிரியை போலீசார் கைது செய்து வைத்திருந்தார்கள். போலீசார் விசாரித்ததில் 1ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்பாக பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ 6**. அதன் அடிப்படையில் 1ம் எதிரி அங்கு ஆஜர் செய்த TN 92 B 9454 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஆஜர் செய்ததை போலீசார் மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 7**. மேற்படி இருசக்கர வாகனத்தில் இரண்டு எதிரிகளும்

ஒன்றாக வந்தார்கள். 2ம் எதிரியும் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்பாக பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ 8**. அதன் அடிப்படையில் 2ம் எதிரி எங்களை பிள்ளைவிளை பாலடைந்த கட்டிடத்திற்கு அழைத்துச் சென்று கட்டிடத்திற்கு பின்னால் ஒளித்து வைத்திருந்த லாரி சக்கரங்களை கழற்றும் ஸ்பேனரை எங்கள் முன்பாக ஆஜர் செய்ததை போலீசார் மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 9**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

29.01.2019 அன்று நான் பணியில் இருந்ததற்கான வருகைப் பதிவேட்டை போலீசார் என்னிடமிருந்து கைப்பற்றவில்லை. போலீசார் அழைத்தால் அந்த பணிக்காக சென்றதாக அலுவலக பதிவேட்டில் நான் குறிப்பிடவேண்டுமா என்றால் அப்படி ஒரு பதிவேடு இல்லை. மேற்படி தோப்பு விலக்கு பகுதி பேருந்து நிறுத்தம் என்பதால் அங்கு எப்போதும் மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி பிள்ளைவிளை என்பது கிராம பகுதி என்றால் சரிதான். மேற்படி கட்டிடத்திற்கு அருகில் விவசாயம் நிலங்கள் தரிசாக இருந்தது. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.09.03 17:27:05 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.74/2020.
Prosecution witness for P.W.15.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. குருசாமி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2025.

A2 died. A1 absent. 317 Crpc petition filed.

முதல் விசாரணை

நான் தற்போது தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 28.02.2019 அன்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்தபோது காவலர் பேச்சி ஆனந்த் என்பவர் சாத்தான்குளம் நீதித்துறை நடுவர் வேண்டுகோள் கடிதத்துடன் 1. ரத்தம்படிந்த மண், 2. ரத்தம்படாத மண், 3. ஒரு ஜோடி செருப்பு, 4. லுங்கி, 5. ஜட்டி, 6. சட்டை, 7. ஸ்பேனர் ஆகியவற்றை ரசாயன பகுப்பாய்விற்காக எங்கள் ஆய்வகத்திற்கு குற்ற எண் 9/2019 மெய்ஞானபுரம் காவல்நிலையத்திலிருந்து சரியான முத்திரையுடன் ஒப்படைத்தார். அவற்றை பகுப்பாய்வு செய்ததில் 2 வது வழக்கு சொத்து தவிர இதர வழக்கு சொத்துக்களில் ரத்தம் இருந்தது. மேற்படி ரத்தக்கறை படிந்த வழக்கு சொத்துக்கள் மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு குருதிவடிநீரியல் பிரிவிற்கு அனுப்பப்பட்டு அறிக்கை பெறப்பட்டதில் மேற்படி மனித ரத்தம் A வகையை சேர்ந்தது என்றும், மேற்படி செருப்பிலும், ஜட்டியிலும் மனித ரத்தம் இருந்ததாகவும், வகை குறிப்பிடாமல் எங்களுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. அதற்கான குருதி

வடிநீரியல் அறிக்கை **அ.சா.ஆ 10**. மேற்படி வழக்கு சொத்துக்களில் உள்ள ரத்தம் குறித்து வழங்கப்பட்ட உயிரியல் அறிக்கை **அ.சா.ஆ 11**. பிரேத பரிசோதனை சமயத்தில் சேகரிக்கப்பட்ட மாதிரி ரத்தம் எங்களுக்கு அனுப்பப்பட்டு மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு அவ்வாறு அனுப்பப்பட்டதாக எங்களுக்கு அனுப்பட்ட அறிக்கை **அ.சா.ஆ 12**. மேற்படி மாதிரி ரத்தமும் A வகையைச் சேர்ந்தது என்று எங்களுக்கு அனுப்பப்பட்ட குருதி வடிநீரியல் அறிக்கை **அ.சா.ஆ 13**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.09.03 17:27:13 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.74/2020.
Prosecution witness for P.W.16.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. வேல்முருகன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2025.

A2 died. A1 absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்தபோது 15.02.2019 அன்று மெய்ஞானபுரம் காவல்நிலைய குற்ற எண் 9/2019 வழக்கு சம்பந்தப்பட்ட இறந்துபோன வில்வின் ரெஜிஷ் என்பவரது உடல் உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு மூடி முத்திரையிடப்பட்டு முதல்நிலை காவலர் திரு. ஆனந்தன் மூலமாக எங்களுக்கு அனுப்பப்பட்டது. அவை முறையே 1. இரைப்பையின் ஒரு சிறு பகுதி, 2. சிறுகுடலின் ஒரு பகுதி, 3. கல்லீரல்மற்றும் சிறுநீரகத்தின் ஒரு பகுதி, 4. ரத்தம் மற்றும் உப்புக் கரைசல் ஆகியவை பெறப்பட்டு தனித்தனியாக பகுப்பாய்வு செய்யப்பட்டதில் இரைப்பையில் 736 மி.கிராம் அளவுள்ள ஈத்தைல் ஆல்கஹாலும், சிறுகுடலில் 213 மி.கிராம் ஆல்கஹாலும், கல்லீரல் மற்றும்சிறுநீரகத்தில் 529 மி.கிராம் அளவு ஆல்கஹாலும், 100 மி.லி ரத்தத்தில் 56 மி.கிராம் ஆல்கஹாலும் கண்டறியப்பட்டது. அதற்கான ஆய்வறிக்கை தூத்துக்குடி அரசு

மருத்துவமனை சட்டம் சார்ந்த மருத்துவப் பிரிவிற்கு அனுப்பப்பட்டது. அதற்கான நஞ்சு இயல் அறிக்கை **அ.சா.ஆ 14**.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.09.03 17:27:19 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.